## 5

# "தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்"

## (1:24-28)

அவ்வப்போது, யாரேனும் ஒருவர் என்னிடத்தில், "நான் ஒரு நல்ல செய்தியும் மோசமான செய்தியும் வைத்திருக்கிறேன். நீங்கள் இவற்றில் எதை முதலில் கேட்க விரும்புகிறீர்கள்?" என்று கூறியுள்ளனர்.[1] பவுல் தமது வாசகர்களுக்கு "நல்ல செய்தியையும்" "மோசமான செய்தியையும்" கொண்டிருந்தார். அவர்கள் கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட முடியும் என்பது நல்ல செய்தியாயிருந்தது. இருப்பினும், அவர் முதலாவதாக, அவர்களுக்கு மோசமான செய்தியைக் கொடுத்தார்: தேவனின்றி அவர்கள் ஆழமாக மூழ்கவும், பாவத்தில் ஆழ்ந்திருக்கவும், இரட்சிப்பின் நம்பிக்கை எதுவுமற்று இருக்கவும் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த சத்தியத்தை நிலைநாட்ட அவர் இரண்டு அதிகாரத்திற்கும் அதிகமான பகுதியை எடுத்துக்கொள்ளும் அளவுக்கு இது மிகவும் வலிவார்ந்ததாக இருந்தது (1:18-3:20).

பவுல், "நாம் யாவரும் பாவிகளாயிருக்கிறோம்" என்று மாத்திரம் கூறி விட்டு, பின்பு நற்செய்திக்குக் கடந்து சென்றிருத்தலை ஏன் செய்யவில்லை? ஏனென்றால் பெரும்பான்மையான மக்கள் தாங்கள் பாவிகளாயிருப் பதைப் பற்றி அறிந்திருப்பதில்லை.

> பெரும்பான்மையானவர்கள், முழுமையான கண்ணோக்கில் தாங்கள் மிக அருமையான நேர்த்தியான மக்களாயிருப்பதாக உணருகின்றனர். அவர்கள் பரிபூரணப்பட்டவர்களாய் இராதிருக்கலாம், ஆனால் அவர்கள் பெரிய தவறொன்றும் செய்துவிடவில்லையே. அவர்கள் எவரொருவரையும் கொலை செய்யவோ அல்லது எந்த ஒரு வங்கி யிலும் கொள்ளையிடவோ இல்லையே. அவர்கள் தங்கள் துணை களை ஏமாற்றவோ அல்லது தங்கள் பிள்ளைகளைத் தவறாகப் பயன்படுத்தவோ இல்லையே. அவர்கள் நேர்மையானவர்களாக மற்றும் கடினமான வேலை செய்பவர்களாக இருக்கின்றனர். மற்றும் அவர்கள் நல்ல அயலகத்தவர்களாக இருக்க முயற்சி செய்கின்றனர். உண்மையில் பேரழிவை ஏற்படுத்தும் பாவத்தை, அவர்கள் செய்வதறியாது இருப்பதால் தங்கள் தேவனுடன் நேராயிருக்க வேண்டும் என்றே அவர்கள் நினைக்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்தத் தர அளவைகளை பூர்த்தி செய்திருக்கலாம், ஆனால் தேவனுடைய தர அளவைகளைத் தாங்கள் பூர்த்தி செய்திருப்பதில்லை

*என்பதை உணர்ந்தறிவதில்லை.*[2]

*ஒரு மனிதர் தலைவலிப்பதால் மருத்துவரிடம் சென்று, அவர் அந்த வலி தீர்க்கும் மாத்திரை தருவார் என்று எதிர்பார்க்கும் சூழ்நிலையொன்றைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அம்மருத்துவர், மாத்திரையைத் தருவ தற்குப் பதிலாக, அம்மனிதர் உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். இதைக் கேள்விப்பட்ட அதிர்ச்சியி லிருந்து அம்மனிதர் மீண்டபின்பு, அவர் அனேகமாக அம்மருத்துவரிடம், அறுவைச் சிகிச்சை ஏன் அவசியம் என்பதை விளக்கும்படி வற்புறுத்துவார். மனிதகுலத்தின் ஆவிக்குரிய "வியாதியானது" ("உன்னதமான வாழ்வை வாழுதல்" அல்லது "அதிக நன்மையான செயல்களைச் செய்தல்" போன்ற) எளிய "ஒழுக்கவியல்" சிகிச்சையின் மூலம் பிரச்சனையை நிவிர்த்தி செய்ய இயலாத அளவுக்கு மிகவும் முற்றியிருந்தது என்பதைத் தமது வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார். (இயேசுவில் வெளிப் படுத்தப்பட்ட தேவ கிருபை என்ற), "மாபெரும் ஆவிக்குரிய அறுவைச் சிகிச்சையின்றி" மனிதகுலம் அழிந்துகொண்டிருந்தது.*

*புறஜாதியார் பாவத்தைப் பற்றிய குற்ற உணர்வை அடையச் செய்ய வேண்டும் என்பது பவுலின் தொடக்கக் கடும்பணியாக இருந்தது. முந்திய பாடத்தில், நாம் இதைப்பற்றிய அவரது முதல் குறிப்புகளை - 1:18-25ல் ஆய்வு செய்தோம். இந்தப் பாடத்தில், நாம் 24ம் வசனத்திற்குப் பின்திரும்பி அதிலிருந்து 28ம் வசனம் வரைக்கும் கடந்து செல்வோம்.*

## *துன்பகரமான புறக்கணித்தல் (1:24, 26, 28)*

*"தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்" (வசனங்கள் 24, 26, 28) என்பது நமது வேதபாடப்பகுதியில் மூன்று முறைகள் காணப்படுகிற இன்றியமையாத சொற்றொடராகும்.* (KJV *வேதாகமத்தில், வசனம் 24 மற்றும் 26ல்* "God gave them up" *என்றும், வசனம் 28ல்* "God gave them over" *என்றும் உள்ளது, ஆனால் கிரேக்க மொழியில்,* "gave over" *மற்றும்* "gave up" *என்பது ஒரே வகையானதாகவே உள்ளது: paredoken.*) *1:18-32ம் வசனப்பகுதியைப் புரிந்துகொள்வதற்கு நாம், "தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்" என்ற எச்சரிக்கையூட்டும் வார்த்தைகளின் மறைவான கருத்துக்களைப் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளது.*

### *திட்டவட்டமான காரணம்*

*இந்தச் சொற்றொடர் காணப்படுகிற ஒவ்வொரு வேளையிலும், "தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்" என்பதற்கான காரணம் நமக்குத் தரப்படுகிறது. வசனங்கள் 22, 23ல், மக்கள் "அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்" என்று நமக்குக் கூறப்படுகிறது. பின்பு 24ம் வசனம், "இதினிமித்தம் … தேவன் அவர்களை … ஒப்புக்கொடுத்தார்" என்று கூறுகிறது.*

*25ம் வசனத்தில், புறஜாதியார் "தேவனுடைய சத்தியத்தைப் …*

பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்" என்று பவுல் கூறினார். பின்பு 26ம் வசனம், "இதினிமித்தம் தேவன் அவர்களை ... ஒப்புக்கொடுத்தார்" என்று தொடங்குகிறது.

28ம் வசனத்தில் பவுல், "தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், ... தேவன் அவர்களை ... ஒப்புக்கொடுத்தார்" என்று எழுதினார். இம்மூன்று வசனப்பகுதிகளிலும், விக்கிரகாராதனையை விளைவித்ததான, தேவனைத் தேவன் என்று ஒப்புக்கொள்ள மறுத்த மனிதகுலத்தின் முரட்டுத்தனமே அவர்களைக் கைவிடும்படி தேவனைத் தூண்டிற்று.

**தெய்வீக பதில்செயல்**

"தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்" என்று கூறியபோது பவுல் எதனை அர்த்தப்படுத்தினார்? தேவன் "அவர்களை ஒப்புக்கொடுத்த"போது அவர் (தேவன்) என்ன செய்தார்? "ஒப்புக்கொடுத்தார்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது (*paredoken,* இது *paradidomi* என்பதிலிருந்து பெறப்பட்டுள்ளது) *para* என்ற முன்னிடைச்சொல்லை *didomi* ("கொடுக்க"[3]) என்ற சொல்லுடன் இணைத்துப்பெறப்பட்ட கூட்டு வார்த்தையாகும். *Paradidomi* என்றால் "கையளித்தல், கொடுத்துவிடுதல்" என்று அர்த்தப்படுகிறது.[4] இது சிலுவையின் வரலாற்றில் இயேசுவை விசாரணைக்காகக் பிலாத்துவினிடத்திலும் மற்றும் தண்டனையை நிறைவேற்றப் போர்ச்சேவகரிடத்திலும் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மாற்கு 15:1, 15).

ரோமர் 1ல், பல மொழிபெயர்ப்புகள் "ஒப்புக்கொடுத்துவிட்டார்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன, ஆனால் சிலருடைய சிந்தனையில், "ஒப்புக்கொடுத்துவிட்டார்" என்பது "இனியும் ஆர்வமாயிருப்பதில்லை" அல்லது "இனியும் அக்கறை கொள்வதில்லை" என்று அர்த்தப்படுகிறது. தேவன் பாவிகளை ஒப்புக்கொடுத்தபோது(ம்), அவர்கள்மீது இன்னமும் அவர் அக்கறை கொண்டுள்ளார் (2 பேதுரு 3:9); அவர்கள் அவரிடமாய்த் திரும்புவார்கள் என்று அவர் இன்னமும் நம்புகின்றார். விஷயம் இப்படியிருப்பதால், பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகள் *paredoken* என்பதன் அர்த்தத்தை விளக்கப்படுத்த மற்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றன. LB வேதாகம பொழிப்புரையில் "தேவன் அவர்களைப் போகவிட்டுவிட்டார்" என்றுள்ளது (வசனம் 26).

அப்படியானால், பவுல் "தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்" - அதாவது, "அவர்களைக் கையளித்தார்," "அவர்களை கொடுத்துவிட்டார்," அல்லது "அவர்கள் போய்விட அனுமதித்தார்" - என்று கூறியபோது அவர் அர்த்தப்படுத்தியது என்ன? பவுலின் சொற்றொடராக்கத்தின்[5] மீதான அணுகுமுறைகளில் விளக்கவுரையாளர்கள் வேறுபடுகின்றனர், ஆனால் பெரும்பான்மையானவர்கள் ஒரே (அல்லது ஒரே மாதிரியான) முடிவை அடைகின்றனர். மனிதகுலத்தை, பாவத்தின் கீழ்நோக்கிய சூழலில் (செல்வதிலிருந்து) தடைசெய்வதற்கு பதிலாக, மக்கள் தாங்கள் விரும்பிய

வற்றைச் செய்வதற்குத் தேவன் அனுமதித்துவிட்டார் (ஆதியாகமம் 6:3ஐ ஒப்பிடவும்). NLT வேதாகமத்தில், "அவர்கள் போகவும், தங்கள் இருதயம் விரும்பிய வெட்கக்கேடான விஷயங்கள் எல்லாவற்றையும் செய்யவும் தேவன் அனுமதித்தார்" என்றுள்ளது (வசனம் 24). மற்றும், மக்களின் செய் கைகளினுடைய விளைவிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, அவர்கள் தேர்ந்துகொண்ட வாழ்க்கை முறையினிமித்தம் ஏற்பட்ட தண்டனைகள் முழுமையையும் அவர்கள் பெற்றுத் துன்புறும்படிக்குத் தேவன் அவர்களை அனுமதித்திருந்தார் (கலாத்தியர் 6:7ஐக் காணவும்). D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ பின்வருமாறு எழுதினார்,

> *மனிதகுலத்தின் செய்கைக்குப் பதில்தரும் வகையிலான தேவனுடைய பதில்செயலானது, விக்கிரகாராதனை செய்பவர்கள்மீது வானத்தில் இருந்து அக்கினியையும் கந்தகத்தையும் அனுப்புதலாக இருந்ததில்லை. இன்றைய நாட்களிலும் அவ்வாறில்லை. அவர் மிக மறைமுகமான மற்றும் முடிவற்றவகையில் வீழ்ச்சி தருகிற சிலவற்றைச் செய்தார் - மனிதர்கள் தங்கள் செய்கையின் ஓட்டத்தில் தங்கள் சுயமுடிவை தேர்ந்தெடுக்க அவர் முற்றிலும் அனுமதித்தார், மேலும் அதனால் ஏற்படும் விளைவுகளுடன் வாழ்வதற்குப் பூரணமான சுயாதீனமும் தந்தார்.*[6]

J. D. தாமஸ் என்பவர், "நீங்கள் தேவனிடத்திலிருந்து பிரிந்து செல்ல முடிவு செய்துவிட்டால், உங்களை அதிலிருந்து தடுத்து நிறுத்துவதற்காகத் தேவன் தூதர்களின் சேனையொன்றை அனுப்பப்போவதில்லை. உங்கள் செய்கை அவரது இருதயத்தை உடையச் செய்யும், ஆனால் நீங்கள் செல்வதற்கு அவர் அனுமதித்துவிடுவார்" என்று கூறினார்.[7] ரிச்சார்டு ரோஜர்ஸ் என்பவர் பின்வருமாறு கூறினார்: "நீங்கள் உங்களைச் சில விஷயங்களுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, தேவன் உங்களை அவ்விஷயத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுவார். [உங்கள் செய்கையினிமித்தம்] அவர் கோபம் கொள்ளக்கூடும் என்றாலும், அவரது செயல் கோபத்தினிமித்தம் ஏற்படுவதல்ல. இது கட்டாயமாய் இருக்க வேண்டியதான, அவரது அன்பினிமித்தமே நடக்கிறது."[8] மூன்று எழுத்தாளர்கள் சேர்ந்த ஒரு குழு, பவுல் தமது நாட்களில் இருந்த மக்களுக்கு, "உங்களைச் சுற்றிலும் கண்ணோக்குங்கள்! எல்லா இடங்களிலும் தேவன் இருந்து, தமது கோபத்தில், பாவம் நிறைந்த இயல்பு தனது ஓட்டத்தை ஓட அனுமதிக்கிறார் என்பதற்குச் சாட்சியங்கள் உள்ளன. மனிதகுலம் இடர்ப்பாட்டில் இருக்கிறது!" என்று கூறியதாகக் கருத்தைத் தெரிவித்தது.[9]

யூஜின் பீட்டர்ஸன் என்பவர் ரோமர் 1:24ன் செய்தியைப் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்: " 'எனவே செயல் விளைவில் தேவன்,' 'நீங்கள் அதை விரும்பினால், அதையே பெறுவீர்கள்' என்று கூறினார். மிக விரைவிலேயே அவர்கள் பன்றிக் கொட்டிலில் வாழத் தொடங்கினர் ..." (MSG). பீட்டர்ஸன் என்பவரின் மேற்கூறிய உருவகம் நமக்கு ஊதாரி மகனை (லூக்கா 15:11-32) நினைவூட்டுகிறது. தந்தை தனது இளைய மகன் இல்லத்தை விட்டுச் செல்வதை விரும்பாதிருந்தார். இருப்பினும், அந்தப் பையன் துன்பத்தை

*நோக்கிச் சென்றான் என்பதை அறிந்திருந்தும், அவன் செல்வதற்கு அவர் அனுமதித்தார். பவுலின் சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துவதென்றால், அந்தத் தந்தை தனது மகனின் சுயநலமான விருப்பங்களுக்கு அவனை "ஒப்புக்கொடுத்து" பன்றிக் கொட்டிலுக்கு நடத்திச் செல்லும் பாதையில் பயணிக்க அவனை அனுமதித்தார். அந்த வேளை யாவற்றிலும் தந்தை, தனது மகன் உணர்வடைந்து இல்லம் திரும்புவான் என்று நம்பியிருந்தார்.*

*மனிதகுலம் (*AB *வேதாகமத்தில் மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ளபடி) "தேவனால் கைவிடப்பட்டு" இருக்கலாம், ஆனால் மக்கள் "தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்களாக" இருந்ததில்லை. பாவம் ஒருவரைத் தேவனிடத்தில் இருந்து பிரிக்கிறது என்றாலும் (ஏசாயா 59:1, 2), பாவி இந்த வாழ்வில் ஒருக்காலும் தேவனால் முற்றிலும் கைவிடப்படுவது இல்லை. பாவம் நிறைந்த இவ்வுலகமானது தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தின் அன்றாட வெளிப்பாடுகளின்மீது எவ்வளவாகச் சார்ந்துள்ளது என்பதை அது (உலகம்) உணர்ந்தறிவதில்லை (மத்தேயு 5:45). இருப்பினும், ஒருவர் மரணம் வரையிலும் மனந்திரும்பாதவராக நிலைத்து இருந்தால், அவர் நித்தியத்திற்கும் "தேவனால் கைவிடப்பட்டவராக" இருப்பார் (2 தெசலோனிக்கேயர் 1:10ஐக் காணவும்). இழந்துபோகப்பட்டவர்கள் "தாங்கள் வற்புறுத்திய பயங்கரமான சுயாதீனத்தை என்றென்றைக்கும் அனுபவிப்பார்கள்"[10] என்று* C. S. *லூயிஸ் சரியாகவே எழுதினார்.*

## *இடர்ப்படுத்தும் விளைவு (1:24, 25)*

*மனிதர்கள் இந்தத் தவறுக்கு அவர்களை தேவன் "ஒப்புக்கொடுத்த" உடன் அவர்கள் எவ்வளவாகச் சீரழிந்தனர் என்பதற்குப் பவுல் இரு உதாரணங்களைக் கொடுத்தார். முதலாவது உதாரணம் பாவத்தின் ஒரு குறிப்பிட்ட வகையாக உள்ளது: ஒழுக்கவீனம் (வசனங்கள் 24-27). இரண்டாவது உதாரணம் இயல்பில் மிகவும் பொதுவானதாக மற்றும் அக்கிரமம் (அல்லது மீறுதல்) என்று நினைக்கப்படக் கூடியதாக உள்ளது (வசனங்கள் 28-32). இந்தப் பாடத்தின் எஞ்சிய பகுதி, முதல் உதாரணத்தின் மீது கவனம் குவிக்கும்.*

*வசனங்கள் 24-27ஐப் பற்றிய நமது கலந்துரையாடலைத் தொடங்கு முன்பு, எவரொருவரையும் குற்றப்படுத்துவதோ அல்லது சங்கடப்படுத்துவதோ எனது நோக்கமல்ல என்பதை வலியுறுத்த என்னை அனுமதியுங்கள். சில பாடக் கருத்துக்களை நாம் தவிர்க்க விரும்பும் அளவுக்கு அவைகள் மிகவும் தொந்தரவு செய்பவைகளாக இருக்கின்றன. இருந்தபோதிலும், பவுல் மனிதகுலத்தின் சீரழிவு பற்றிய தமது கலந்துரையாடலில் திறந்த மனதுடன் இருந்தார். ஒருவர் தேவனுடைய சத்தியத்தை - அவருடைய சகல சத்தியத்தையும் (நடபடிகள் 20:20, 26ஐக் காணவும்) - பிரசங்கிக்க, போதிக்க தம்மை ஒப்புக்கொடுக்கையில் நமது வேத வசனத்தின் இப்பகுதியை நான் எடுத்துரைத்து முடிப்பது அவசியமாய் இருக்கிறது. நான் செப்பமற்று இராதிருக்க ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்வேன், ஆனால் தெளிவாக எடுத்துரைக்க நான் முயற்சி செய்வேன்.*

*பாலியல் தொடர்பு*

*ரோமர் 1:22, 23ல், பவுல் விக்கிரகங்களைப் பற்றிக் கலந்துரையாடிய பின்பு, "இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளி னாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" (வசனம் 24). "இச்சைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (epithumia என்ற) வார்த்தை, எவ்வகையிலுமான பலத்த விருப்பங்களைக் குறிக்கிறது. இது தூய்மையான விருப்பம் ஒன்றைக் குறிப்பிட முடியும் (லூக்கா 22:15ஐக் காணவும்), ஆனால் இது வழக்கமாகப் பொல்லாத இச்சைகளையே குறிக் கிறது.*[11] *ரோமர் 1:24ல் பவுல் "அசுத்தத்திற்கான" ஒரு பலத்த விருப்பத்தைப் பற்றிப் பேசினார்.*

*"அசுத்தம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (akatharsia என்ற) வார்த்தையானது "சுத்தம்" என்பதற்கான (katharismos என்ற) வார்த்தை யுடன் ஒரு எதிர்மறை முன் வார்த்தையை (a) சேர்த்துப் பெறப்பட்டுள்ளது, எனவே இவ்வார்த்தை அடிப்படையில் "அசுத்தம்" என்று அர்த்தப்படுகிறது* (KJV *வேதாகமத்தில் காணவும்). இந்த "அசுத்தம்" என்பது உடல்ரீதியான தாக, சடங்காச்சாரரீதியானதாக அல்லது ஒழுக்கரீதியானதாக இருக்கக் கூடும்.*[12] *குறிப்பிட்ட வகையிலான ஒழுக்கரீதியான அசுத்தத்தைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதை 1:24ன் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக் காண்பிக்கிறது.* NIV *வேதாகமத்தில் "பாலியல் ரீதியான அசுத்தம்" என்றுள்ளது.*

*மனிதர்கள் தேவனை விட்டுப் பிரிந்தபோது, அவர்கள் ஒழுக்கரீதியான நெறிமுறைகளைத் தூக்கி எறிந்தனர். சீர்குலைந்த சமுதாயத்தின் அடை யாளங்களில் (1) பாலியல் உறவில் வரையறையற்ற தன்மை அதிகரித்தல் (2) "பாலியல் உறவில் சுதந்திரம்" கொண்டிருக்க ஒரு அதிகார வேண்டு கோள் மற்றும் இதைத் தொடர்ந்து (3) பாலியல் உறவில் வரம்பு மீறுதல் மிகவும் பரவலாகுதல் ஆகியவை உள்ளன. ரோமாபுரியில், தனிப்பட்ட இச்சைகளை நாடி நிறைவேற்றுதல் என்ற குணமே அரசாண்டது என்று கூறப்படுவது உண்டு.*

*24ம் வசனத்திற்கு முன்பு விக்கிரகங்களைச் செய்தல் பற்றிய ஒரு வசனப்பகுதி உள்ளது (வசனம் 23) மற்றும் அதனைத் தொடர்ந்து, விக்கிர கங்களைத் தொழுதுகொள்ளுதல் பற்றிய ஒரு வசனப்பகுதி (வசனம் 25) வருகிறது. விக்கிரகாராதனை பற்றிய இரு வசனங்களுக்கிடையில் பாலியல் ரீதியான ஒழுக்கவீனம் பற்றிய இவ்வசனம் வருதல் என்பது ஏதோ தற்செயலாக ஏற்பட்டதாயிருப்பதில்லை. புறதெய்வக் கோவில்கள், அங்கிருந்த - ஆண்கள் மற்றும் பெண்கள் கொண்ட - கோவில் விபசாரக் கூட்டத்திற்குக் குறிப்பிடத்தக்கவைகளாய் இருந்தன, அவர்கள் விலை கொடுத்தால் பாலியல்ரீதியான எவ்வகையிலான விகாரமான செய்கை யிலும் ஈடுபடுவார்கள். பாலியல்ரீதியான ஒழுக்கவீனம் என்பது விக்கிர காராதனைக்காரர்களின் கோவில் "ஆராதனையில்" மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் அன்றாட வாழ்விலும் மேலோங்கியிருந்தது.*

***வசனரீதியான கண்டனம்***

*இந்தப் புறதெய்வ நடைமுறைகள் தேவனுடைய சித்தத்திற்கு நேர் மாறானவைகளாயிருந்தன. யாத்திராகமம் 20ல், தேவன் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தபோது, "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" என்பது ஏழாவது கட்டளையாயிருந்தது (வசனம் 14; ரோமர் 13:9ஐக் காணவும்). தொடர்ந்து வந்த அதிகாரங்களில் அந்த அடிப்படைக் கட்டளை விரிவாக்கப்பட்டு, பொதுவான பாலியல்ரீதியான பாவங்களை உள்ளடக்கிற்று (லேவியராகமம் 18:6-23ஐக் காணவும்). பழைய ஏற்பாட்டில், தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமணத்திற்குப்[13] புறம்பான பாலியல் உறவுகள் ஊக்குவிக்கப்படாமலும், கண்டனம் செய்யப்பட்டும் இருந்தன (உபாகமம் 22:22ஐக் காணவும்).*

*பல மொழிபெயர்ப்புகளில்* "sex" *என்ற வார்த்தை அரிதாகவே காணப்படுகிறது, ஆனால் அந்தப் பாடக்கருத்தைப் பற்றி வேதாகமம் அதிகமாய்க் கூறுகிறது (எடுத்துக்காட்டாக, நீதிமொழிகள் 5:1-6; 7:6-27; சாலொமோனின் உன்னதப்பாட்டு ஆகியவற்றைக் காணவும்). பாலியல் ரீதியான உறவுக்குப் பயன்படும் வார்த்தை (நாம் இன்றைய நாட்களில் செய்வது போன்றே) மறைமுகமான வார்த்தையாகவே உள்ளது. "அறிதல்" என்பது மிகப் பொதுவான வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது - இது "ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்[14]; அவள் கர்ப்பவதியாகி" என்பதில் உள்ளதைப் போன்றதாகும் (ஆதியாகமம் 4:1அ;* KJV; *லூக்கா 1:34; மத்தேயு 1:25 ஆகியவற்றைக் காணவும்;* KJV). *மற்ற சொல் விளக்கங்களில், "இசைந்திருத்தல்," மற்றும் "ஒரே மாம்சமாயிருத்தல்" ஆகியவை உள்ளடங்குகின்றன (ஆதியாகமம் 2:24; மத்தேயு 19:5; எபேசியர் 5:31).*

*புதிய ஏற்பாட்டில், வசனரீதியான திருமணத்தில், கணவன் மற்றும் மனைவி ஆகியோருக்கு இடையிலான பாலுறவு தேவனால் அங்கீகரிக்கப்பட்டும் ஊக்குவிக்கப்பட்டும் உள்ளது (எபிரெயர் 13:4; 1 கொரிந்தியர் 7:2-5). அந்த உறவுக்குப் புறம்பான வேறெந்த உறவும், திருமணம் மற்றும் இல்லம் ஆகியவற்றிற்கான தெய்வீக ஏற்பாட்டை விகாரமாக்குகிறது என்ற வகையில் கண்டனம் பண்ணப்பட்டுள்ளது. திருமணமாகாத இரு தனி நபர்களிடையே உள்ள பாலுறவு "வேசித்தனம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருமணமான ஒரு தனிநபர் தனது துணையாயிராத எதிர்பாலினம் சேர்ந்த இன்னொரு நபருடன் பாலுறவு கொள்ளுதல் "விபசாரம்"[15] என்று அழைக்கப்படுகிறது (ரோமர் 7:3ஐக் காணவும்). இவைகளும், பாலியல்ரீதியான பிற பாவங்களும், ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களால் கடுமையாகக் கண்டனம் பண்ணப்பட்டுள்ளன (லூக்கா 16:18; நடபடிகள் 15:20; கலாத்தியர் 5:19-21; 1 தெசலோனிக்கேயர் 4:2-5).*

***தீவிரமான அக்கறை***

*பவுலின் நாட்களில், பாலியல்ரீதியான இச்சையை ஊக்குவித்தல் அல்லது பாலியல் உறவில் வரம்புமீறுதலை அங்கீகரித்தல் என்பது சமுதாயம் தேவனை விட்டு விலகிச் சென்றதற்கான அடையாளமாயிருந்தது. அது நாம் வாழும் இவ்வுலகம் பற்றிக் கூறுவது என்ன?[16] புத்தகங்கள், திரைப்படங்கள்,*

தொலைக்காட்சி, மற்றும் பாடல்கள்கூட பாலியல் விகாரப்பொருள டக்கத்துடன் நம்மை வந்து மோதுகின்றன. திருமணத்திற்குப் புறம்பான பாலியல் உறவு என்பது சாதாரணமானதாக, இயல்பானதாக, எதிர்பார்க்கப் படுவதாக, மற்றும் உயர்வாக விரும்பப்படத்தக்கதாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. திருமணத்திற்கு முன்பு பாலுறவு கொண்டிராத இளைஞர் களும் இளம் பெண்களும் இயற்கைக்கு மாறானவர்களாக இருப்பது போன்று சில வேளைகளில் நடத்தப்படுகின்றனர். உலக சிந்தை கொண்ட வர்களுக்கு, "ஒன்றாக வாழுதல்" என்பது திருமணத்தின் "ஆழமான உறுதிப் பாட்டை" விளைவித்தாலும் விளைவியாமற் போனாலும், உடலுறவுச் செயல்பாட்டிற்கான இன்னொரு படி நிலையாகியுள்ளது. பேதுரு மற்றும் யூதா ஆகியோரிடமிருந்து ஒரு சொற்றொடரைக் கடனாகப் பெறுவ தென்றால், இப்படிப்பட்ட மக்கள், "புத்தியற்ற மிருகங்கள்" போல வாழ் கின்றனர் (2 பேதுரு 2:12; யூதா 10). இப்படிப்பட்ட வாழ்க்கை முறையை (எனது) பாட்டியார் இன்னும் அதிக வனப்புடன் விவரிப்பதுண்டு. அவர், "அவர்கள் சந்தில் உள்ள பூனையின் ஒழுக்கங்களைக் கொண்டுள்ளனர்" என்று கூறுவார்.

குற்றம் உணர்த்தப்பட்டவர்களிடத்தில் இருந்து மறுப்புரை ஒன்றை நான் கேட்கிறேன்: "எங்களைப் பற்றி நீங்கள் கடுமையான விஷயங்களைக் கூறுவது ஏன்? நாங்கள் எவரொருவரையும் மனம் புண்படச் செய்வதில்லையே!" ஆம், நீங்கள் அவ்வாறு செய்கிறீர்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தினரையும் உங்கள் மீது அக்கறை கொண்டுள்ள மற்றவர்களையும் மனம் புண்படச் செய்கிறீர்கள். மற்றும், நீங்கள் நாம் வாழ்கிற இவ்வுலகத்தையும் மனம் புண்படச் செய்கிறீர்கள். தெய்வீகத் தர அளவைகள் மறைகிறபோது, நாகரீகத்தின் பின்னல் வேலை மேலிருந்து கீழாகக் கிழிபடுகிறது. திருமணத்திற்குப் புறம்பான பாலுறவு சமூகத்தின் மூலைக்கற்களான திருமணத்தையும் இல்லத்தையும் பலவீனப்படுத்துகிறது.

மேலும், நீங்கள் உணர்ந்தறிந்தாலும் இல்லையென்றாலும், நீங்கள் உங்களையே புண்படுத்திக் கொள்கிறீர்கள். தேவன் மக்களை "அவர்களின் இருதயங்களிலுள்ள இச்சைகளினாலே ... அசுத்தத்திற்கு" ஒப்புக்கொடுத்த போது, "அவர்களின் சரீரங்கள் அவமானப்படுத்தப்பட்டன"[17] என்பது பரிதாபகரமான விளைவாக இருந்தது (ரோமர் 1:24). ரோமருக்கு எழுதிய நிருபத்தின் பிற்பகுதியில், பவுல் தமது வாசகர்கள் தங்கள் "சரீரங்களைத் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாகச் செலுத்த" வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார் (12:1). வேறொரு இடத்தில், பவுல் சரீரம் "பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்க" வேண்டும் மற்றும் நாம் "நமது சரீரங்களினாலே தேவனை மகிமைப்படுத்த வேண்டும்" என்று சுட்டிக் காண்பித்தார் (1 கொரிந்தியர் 6:19, 20). ஒருவர் திருமணத்திற்கு முந்திய அல்லது திருமணத்திற்குப் புறம்பான பாலுறவில் ஈடுபடும்போது, அவர் தமது சரீரத்தை ஆவியானவர் வாசம்பண்ணும் ஆலயமாக அன்பில் அர்ப்பணிப்பதற்குப் பதிலாக அவர் அதை (சரீரத்தை) பிசாசின் ஆலய மாக, இச்சைக்கு அர்ப்பணிக்கிறார். பவுல், "சரீரமோ வேசித்தனத்திற்

*கல்ல, கர்த்தருக்கே உரியது ...”; “வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப்பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ் செய்கிறான்” என்று எழுதினார் (1 கொரிந்தியர் 6:13, 18).*

## *பயங்கரமான அழிவு (1:26, 27)*

**ஓரினச்சேர்க்கையின் குழப்பம்**

பவுல் விக்கிரகாராதனையைப் பற்றி இன்னொரு வரியை (1:25) எழுதி விட்டு, பின்பு சமூகம் சென்றடைந்திருந்த பாவம் நிறைந்த பாலுறவின் ஆழங்களுக்குக் குறிப்பான ஒரு உதாரணம் கொடுத்தார். அவர் பின்வரு மாறு கூறினார்,

> *இதினிமித்தம் [அவர்களின் விக்கிரகாராதனையினிமித்தம்] தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத் தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநு போகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றி னார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள் (வசனங்கள் 26, 27).*

இவ்விடத்தில் விவரிக்கப்பட்டுள்ள பாவத்தை உணர்ந்தறிவதில் பெரும்பான்மையான வாசகர்கள் இடர்ப்பாடு அடைவதில்லை. இது வேதாகமத்தில் ஓரினச்சேர்க்கைக்கு எதிரான, மிகத்தெளிவானதும் பல மானதுமான போதனையாகும் (இது தொடர்பான பிற வசனப்பகுதி களுக்கு, 1 கொரிந்தியர் 6:9, 10; 1 தீமோத்தேயு 1:8-10; ஆதியாகமம் 19:1-28; லேவியராகமம் 18:22; 20:13; உபாகமம் 23:17, 18 ஆகியவற்றைக் காணவும்).

ஓரினச்சேர்க்கை என்பதற்கான “homosexuality” என்ற ஆங்கில வார்த்தையில் உள்ள “homo” என்பது, “போன்ற” அல்லது “ஒரே” என்று அர்த்தப்படும் *homos* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட் டுள்ளது. இவ்விதமாக, “ஓரினச்சேர்க்கை” என்பது ஒரே பாலினத்தைச் சேர்ந்த இருவருக்கிடையே (இரு ஆண்கள் அல்லது இரு பெண்கள் இடையே) பாலுறவு நிலவுதலைக் குறிக்கிறது. இது இயற்கைப் பாலுறவு என்ற அர்த்தம் தருகிற “heterosexuality” என்ற வார்த்தைக்கு நேர்மாறானதாக உள்ளது, அவ்வார்த்தை ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நிலவும் பாலுறவைக் குறிக்கிறது (*heteros* என்பது “பிற” என்பதற்கான கிரேக்க வார்த்தையாகும்). ஆணுடன் ஆண் சேரும் ஓரினச்சேர்க்கைக்காரர்கள் “gay” என்ற பெயரை விரும்புகையில், பெண்ணுடன் பெண் சேரும் ஓரினச்சேர்க்கைக்காரர்கள் “lesbians” என்று அழைக்கப்படுகின்றனர். இந்தப் பிந்திய சொற்றொடர், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பெண்

ஓரினச்சேர்க்கை மேலோங்கியிருந்த லெஸ்போஸ் என்ற ஏஜியின் கடல் தீவின் பெயரில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது.

ரோமர் 1:26, 27ல் பவுல் ஓரினச்சேர்க்கை பற்றிப் பேசினார் என்பதைச் சிலர் மறுக்கின்றனர், ஆனால் அவர் இதைவிட அதிகம் தெளிவாய் வேறு எவ்வாறு கூறியிருக்க முடியும் என்று காண்பது கடினமாக உள்ளது: "... பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள் ... ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து ..." CEV வேதாகமத்தில், "பெண்கள் இயல்பான முறையில் உடலுறவு கொள்வதை இனியும் விரும்பாதிருந்தனர் ... ஆண்களும் இவ்வாறே நடந்தனர். அவர்கள் பெண்களுடன் உறவு கொள்வதை நிறுத்திவிட்டு, பிற ஆண்கள்மீது பலத்த இச்சை கொண்டு இருந்தனர்" என்று உள்ளது.

**பரலோக ஆக்கினைத் தீர்ப்பு**

ரோமர் 1:26, 27 ஓரினச்சேர்க்கை பற்றிக் கலந்துரையாடுகிறது என்பது மாத்திரமல்ல, ஆனால் அப்படிப்பட்ட செய்கை தேவனுடைய சித்தத்திற்கு முரணானது என்பதும் தெளிவாகிறது. முதலாவது, பவுல் ஓரினச்சேர்க்கை "இழிவான இச்சை ரோகத்தின்" விளைவு என்று கூறினார் (வசனம் 26), "இச்சை" என்பதற்கான (*pathos* என்பதன் ஒரு வடிவமாயுள்ள) சொல்லானது புதிய ஏற்பாட்டில் எப்போதுமே, மோசமான கருத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.[18] "இழிவான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*atimia* என்பதிலிருந்து வரும்) சொல்லானது "கனவீனமான" அல்லது "வெட்கக்கேடான" என்று அர்த்தப்படுகிறது.[19] பிலிப்ஸ் வேதாகமத்தில் "disgraceful passions" என்றுள்ளது.

பின்பு பவுல் ஓரினச்சேர்க்கையை "சுபாவத்துக்கு விரோதமானது" என்று குறிப்பிட்டார் (வசனம் 26). இது "குறுகிய சிந்தை கொண்ட ஏதோ ஒரு பிரசங்கியாரின்" தீர்ப்பாக அல்ல, ஆனால் கர்த்தருடைய அப்போஸ்தலரின் ஏவுதல் பெற்ற அறிவிப்பாக உள்ளது. "சுபாவத்துக்கு விரோதமான" என்பது இரு கிரேக்க வார்த்தைகளின் மொழிபெயர்ப்பாக உள்ளது: "எதிரான" என்று அர்த்தப்படுகிற முன்னிடைச்சொல் (*para*) மற்றும் "சுபாவம்" என்பதற்கான சொல் (*phusis*). இந்தச் சொற்றொடர் நேரடியான அர்த்தத்தில் "இயற்கைக்கு/இயல்புக்கு எதிரானது" என்று பொருள்படுகிறது. AB வேதாகமத்தில், "unnatural and abnormal" என்றுள்ளது. மனித உடற்கூறு பற்றி அறிந்துள்ள எவரொருவருக்கும், ஆண்கள் ஆண்களுடன் பாலுறவு கொள்ளுதல் "சுபாவத்துக்கு விரோதமானது" என்பது தெரிந்த கருத்தாக இருக்க வேண்டும். பொதுவில், பாவம் என்பது மனிதகுலத்தை மிருகங்களின் நிலைக்குத் தாழ்த்தியிருந்தது என்று முன்னதாக நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். ஓரினச்சேர்க்கையானது மனிதர்களை மிருகங்களுக்கும் கீழான நிலைக்குக் கொண்டு சென்றிருந்தது. நான் பண்ணை சமூகங்களில் வளர்ந்தேன், அங்கு ஒரு காளை மாடு இன்னொரு காளை மாட்டின் மீது பிரியம் கொண்டதையோ அல்லது ஒரு சேவல் இன்னொரு சேவலுடன்

புணர்ச்சி கொண்டதையோ நான் ஒருக்காலும் கண்டதில்லை.

ஓரினச்சேர்க்கை செய்த பெண்கள் சுபாவமான அநுபோகத்தை சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக "மாற்றினார்கள்" என்று பவுல் கூறினார் (வசனம் 26). "மாற்றினார்கள்" என்பதற்கு இங்கு காணப்படும் கிரேக்க வார்த்தையானது, 23ம் வசனத்தில் மனிதகுலம் "அழிவில்லாத தேவனுடைய மகிமையை ... ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்" என்று கூறும் இடத்தில் உள்ள அதே வார்த்தையாகவே இருக்கிறது. மனிதர்கள் விக்கிரகங்களுக்காகத் தேவனை விட்டு விட்டபோது ஒரு மோசமான பரிவர்த்தனையைச் செய்திருந்தனர், மற்றும் பெண்கள், ஆண்களுடனான இயல்பான உறவுகளை பெண்கள் பெண்களுடன் கொள்ளும் உறவாக மாற்றியபோது, அவர்கள் ஒரு பரிதாபகரமான பரிவர்த்தனையைச் செய் திருந்தனர்.

ஆண் ஓரினச்சேர்க்கைக்காரர்களைப் பற்றிப் பவுல், "ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல்" என்று கூறினார் (வசனம் 27). இவ்விடத்தில் ஆங்கில வேதாகமத்தில் "men abandoned the natural function of the woman"[20] என்றுள்ளது. இதில் "abandoned" (கைவிட்டனர்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*aphiemi* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை பலத்த சொற்றொடராக உள்ளது.[21] இது "இருந்து" என்பதற்கான முன்னி டைச்சொல்லை (*apo*), "அனுப்ப" என்பதற்கான சொல்லுடன் (*hiemi*) இணைக்கிறது. இது "புறம்பே அனுப்புதல், ஒதுக்கித் தள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது.[22] ஆண் ஓரினச்சேர்க்கைக்காரர்கள், பெண்களுடனான இயல்பான உறவை வேண்டுமென்றே ஒதுக்கித் தள்ளினார்கள்.

அவர்கள் ஏன் இதைச் செய்தனர்? ஏனென்றால் அவர்கள் "ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி(னர்)" (வசனம் 27). "பொங்கி" என்பது "வேகுதல்" என்பதற்கான (*kaio* என்ற) வார்த்தையை *ek* என்ற முன்னிடைச்சொல் சேர்த்துப் பெறப்பட்ட வலிவார்ந்த வார்த்தையான *ekkaio* என்ற வார்த்தையிலிருந்து வந்துள்ளது. ஆங்கில வேதாகமத்தில் "desire" "(விருப்பம்)" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*orexis* என்ற) வார்த்தை "lust"(இச்சை) என்று மொழிபெயர்க்கப்பட முடியும் (KJV வேதாகமத்தில் காணவும்). AB வேதாகமத்தில், "the men ... were set ablaze (burning out, consumed) with lust" என்றுள்ளது. ஓரினச்சேர்க்கைக்காரர்கள் தங்களின் இச்சையைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அதைக் கட்டுப்பாடின்றி பொங்கியெழ அனுமதித்தனர்.

மீண்டுமாகப், பவுல் ஓரினச்சேர்க்கைக்காரர்கள் "அவலட்சணமானதை" நடப்பித்தனர் என்று குற்றம் சாட்டினார் (வசனம் 27). "அவலட்சணம்" என்பதற்கான வார்த்தை (*aschemosune*), "மனித நடத்தையில் நேர்த்தி யானது" என்று அர்த்தம் தருகிற வார்த்தையின் எதிர்மறை வடிவமாக உள்ளது.[23] இவ்விடத்தில் பவுல் ஒருமை வடிவத்தைப் பயன்படுத்தி னார், இது எனது NASB வேதாகமப் பிரதியில் உள்ள குறிப்பு ஒன்றில், "வெட்கக்கேடான செய்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஓரினச் சேர்க்கைக்காரர்கள் (தங்கள் செய்கையைக் குறித்து) பெருமை கொள் வதற்குப் பதிலாக, வெட்கம் அடைந்திருக்க வேண்டும்.

கடைசியாக, 27ம் வசனத்தில், பவுல் ஓரினச்சேர்க்கையைக் குறிப்பிடுவதற்கு "error" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். இது "தப்பிதம்" என்று தமிழ் வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "தப்பிதம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*plane* என்ற) வார்த்தை, "உபதேசத்தில் ... அல்லது ஒழுக்கநெறியில் ... சரியான பாதையைக் கைவிடுதல்" என்று அர்த்தப்படுகிறது.[24] ஓரினச்சேர்க்கைக்காரர்கள் சரியான பாதையில் அல்ல, ஆனால் தவறான பாதையில் இருந்தனர்.

பவுலின் பேரழிவுக்கு உட்படுத்தும் சாபங்கள் இருக்கும் நிலையிலும், இன்னும் தங்களது ஓரினச்சேர்க்கையை நியாயப்படுத்த முயற்சிப்பவர்கள் உள்ளனர். சிலர் ரோமர் 1:26, 27ல் உள்ள "சுபாவ" மற்றும் "சுபாவத்துக்கு விரோதமான" என்ற வார்த்தைகளைச் கைப்பற்றியுள்ளனர். பவுல் ஓரினச்சேர்க்கையை "சுபாவமாக" கொண்டவர்களையல்ல, ஆனால் ஓரினச்சேர்க்கையை "சுபாவத்துக்கு விரோதமானதாக"க் கொண்டவர்களையே கண்டனம் பண்ண நோக்கங்கொண்டிருந்தார் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பவுல் ஆண் பெண்ணுடன் சேருவதை வழக்கமாகக் கொண்டவர்கள் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவதைத்தான் கடிந்து கொண்டார் (என்று அவர்கள் கூறுகின்றனர்). டக்ஸஸ் J. மூ என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> "சுபாவம்" என்ற பவுலின் மொழிநடையை அதற்கேற்ற பின்னணியில் புரிந்துகொள்ளத் தவறுதல்தான் இந்தக் கண்ணோட்டத்தில் உள்ள பிரச்சனையாகும். மற்ற யூத எழுத்தாளர்கள் செய்ததுபோன்றே பவுலும், இவ்வார்த்தையை தேவனால் நியமிக்கப்பட்டுள்ள வகையிலான விஷயங்களின் சுபாவமான முறைமையைக் குறிப்பிட பயன்படுத்தினார். உதாரணமாக, வரலாற்றாளரான யோசிப்பஸ், "[மோசேயின்] நியாயப்பிரமாணம், மனைவியுடனான இயல்பான உடலுறவைத் தவிர வேறு பாலியல் தொடர்பு எதையும் அறிவதில்லை" என்று எழுதுகிறார் (*Against Apion 2.24*). இவ்வசனப் பகுதியில், "சுபாவம்" என்பது தனி மனித சுபாவம் அல்லது பழக்கம் என்பதையல்ல, ஆனால் தேவன் படைத்துள்ள வகையிலான உலகத்தையே குறிக்கிறது. ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுதல் என்பது, ஆண் மற்றும் பெண் என்ற மனிதப்பிறவிகளை அவர் படைத்தமைக்கான நோக்கத்தை மீறுதலாக உள்ளது.[25]

மூ அவர்கள் "பவுல் மனிதப்பிறவிகளின் தெய்வீகப் படைப்பான 'பெண்' (*thelys*) மற்றும் 'ஆண்' (*arsen*) என்பதற்கான கிரேக்க வார்த்தைகளை, அந்த வித்தியாசத்திலிருந்து பாய்ந்து வருகிற தகுதியான பாலியல் தொடர்புகளையும் இவ்விரு வகைகளையும் முக்கியத்துவப்படுத்தப் பயன்படுத்துகிறார்" என்று குறிப்பிட்டார்.[26]

ஜான் R. W. ஸ்டாட் என்பவர்கூட, "சுபாவ" மற்றும் "சுபாவத்துக்கு" என்ற வார்த்தைகள் பற்றி விளக்கம் கொடுத்தார்:

> ... "சுபாவம்" என்ற பெயர்ச்சொல்லை "எனது" சுபாவம் என்றோ அல்லது 'சுபாவமான' என்ற பெயர் உரிச்சொல்லை, "எனக்கு

சுபாவமானதாகக் காணுகிறபடி'' என்றோ விளக்கப்படுத்த நாம் உரிமை பெற்றிருப்பதில்லை. இதற்கு நேர்மாறாக, *physis* ([அல்லது *phusis,*] "சுபாவமான") என்பது தேவனுடைய படைப்பு முறைமையை அர்த்தப்படுத்துகிறது. "சுபாவத்துக்கு விரோதமாக" செயல்படுதல் என்பது தேவன் நிலைநாட்டியுள்ள முறைமையை மீறுதல் என்பதை அர்த்தப்படுத்துகையில், ''சுபாவப்படி'' செயல்படுதல் என்பது "சிருஷ்டிகரின் நோக்கத்திற்கு இணங்க" நடத்தல் என்று அர்த்தப் படுகிறது. ஆதியாகமத்தில் கூறப்படுவதை இயேசுவும் உறுதிப்படுத்தி னார்: "ஆதியிலே மனுஷரை உண்டாக்கியவர் அவர்களை 'ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்' ... 'இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந் திருப்பான்'; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆகவே அவர்கள் இனியும் இருவரல்ல, ஆனால் ஒருவர். ...'' தேவனுடைய இந்தச் செயல், ஆணும் பெண்ணும் இணைந்திருக்கும் ஒருதாரத் திருமணமே தேவனுடைய நோக்கமாகும் என்ற ஒரே சந்தர்ப்பப்பொருளை நிலைநாட்டிற்று, மற்றும் ஓரினச்சேர்க்கை என்பது (எவ்வளவுதான் அன்பும் உறுதிப்பாடும் உடையதென்று உரிமை கோரிக்கொண்டாலும்), அது "சுபாவத்துக்கு விரோதமானதாக" உள்ளது, அதை திருமணத்திற்குச் சட்டப்பூர்வமான மாற்றாக ஒருபோதும் கருத இயலாது.[27]

''ஓரினச்சேர்க்கைக்காரர்களாலோ'' அல்லது ''ஆண் பெண் உறவை மேற்கொள்பவர்களாலோ'' யாரால் செய்யப்பட்டாலும், ஓரினச்சேர்க்கை செயல்களைப் பவுல் கண்டனம் செய்தார் என்பதே உண்மையாக உள்ளது. அப்போஸ்தலர் இவ்வளவு கடினமாகவும் தெளிவாகவும்/எளிமையாகவும் பேசியது ஏன்? ஏனென்றால் அவரது நாட்களில் புறஜாதியாரின் மத்தியில், ஓரினச்சேர்க்கையும் பாலியல் உறவு தொடர்பான மற்ற பிறழ்வுகளும் சாதாரணமானவைகளாயிருந்தன. ரோமராஜ்யத்தின் முதல் பதினைந்து பேரரசர்களில் பதினான்குபேர் ஓரினச்சேர்க்கைக்காரர்களாக இருந்தனர் என்பது பிரசித்தமாய் இருந்தது.[28] கிரேக்கத் தத்துவ ஞானிகளில் பலர் பாலியல் ரீதியில் தவறான பாதையில் இருந்தனர்.

பவுலின் வார்த்தைகள் அவற்றை அவர் எழுதிய வேளையில் இருந்தது போன்றே இன்றும் ஏற்புடையவைகளாக உள்ளன. சற்றே முற்பட்ட காலங்களில், ஓரினச்சேர்க்கை (அல்லது ''sodomy,'' என்று அழைக்கப்படுகிற இந்த) செயலானது சுபாவம், மனிதகுலம் மற்றும் நாகரீகம் ஆகியவற்றிற்கு எதிரானதாகக் கருதப்பட்டது. இருப்பினும், சமீபத்திய காலங்களில் ஓரினச் சேர்க்கைக்கு ஆதரவான பிரச்சாரங்கள் நம்மிடையே அலைமோதுகின்றன. ஓரினச்சேர்க்கைக்காரர்கள் முதலில் சகிப்புத்தன்மை, பின்பு பரிவு ஆகியவற்றை வேண்டிக்கொண்டனர். இப்போதோ அவர்கள் தங்கள் "மாற்று வாழ்க்கை முறை"க்கு முழுமையான அங்கீகாரம் மற்றும் ஆதரவு[29] ஆகியவை தவிர வேறெதிலும் திருப்தியடைவதில்லை. இன்னமும் அவர்கள் மக்கள் தொகையில் மிகச்சிறிய அளவு சதவிகிதத்தினராகவே உள்ளனர், ஆனால்

*யாரும் இதை - "ஆண் சேர்க்கை" பாத்திரங்கள் மற்றும் "ஆண் சேர்க்கை" கதைக்கருக்கள் ஆகியவற்றை அதிக அளவு சதவிகிதம் உள்ளதாகக் காண்பிக்கும் - திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆகியவற்றிலிருந்து அறியமாட்டார்.*

*அரசியல்வாதிகள், ஓரினச்சேர்க்கையாளர்களுக்குப் பின்பலம் அளிக்கவும், அவர்களின் இயக்கத்தை ஆதரிக்கவும் ஆவல் கொண்டுள்ளனர். தாராளமயமான நாமகரணக்கூட்டங்கள், "ஆணுடன் ஆண் சேர்க்கை செய்யும்" நபர்களை மதத்தலைவர்களாக வெளிப்படையாக "நியமித் துள்ளன." ஒருவர் இதைத் தேவனுடைய வசனத்தின் போதனையைக் கொண்டு நேரடியாக எதிர்த்து நின்றால், அவர் அன்பற்றவராக, முன் தப்பெண்ணம் உடையவராக, மூடலான சிந்தை உடையவராகச் சித்த ரிக்கப்படுகிறார். ஓரினச்சேர்க்கைக்காரர்களின் "உரிமைகள்" பற்றிக் கேள்வி யெழுப்பத் துணிபவரை விவரிக்க ஒரு சொற்றொடர்கூட உள்ளது:* "homophobic" *(ஓரினச்சேர்க்கைக்கு அஞ்சுபவர்). ஒரு காலத்தில் இவ்வார்த்தை, ஓரினச்சேர்க்கை செய்ய அஞ்சுபவர்களைக் குறிப்பிட்டது; இப்போது இச்சொற்றொடர், ஓரினச்சேர்க்கை வாழ்வு முறையைக் கண்டனம் செய் பவர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.*[30]

*ஓரினச்சேர்க்கைக்கு எதிராகப் பேசுதல் என்பது வெகு ஜன விருப்பமற்றதாக அல்லது "அரசியல் ரீதியில் ஆதாயமற்றதாக" இருக்கலாம், ஆனால் அவர்கள் (ஓரினச்சேர்க்கைக்காரர்கள்) எப்பொழுதும் கொண்டுள்ளது என்ன என்பதைப் பற்றி வேத வசனங்கள் இன்னமும் கூறுகின்றன. ஓரினச்சேர்க்கைச் தவறானது. ஓரினச்சேர்க்கை செயல்கள் பாவமானவை.*

### ***தீங்கு நிறைந்த விளைவுகள்***

*ஓரினச்சேர்க்கைக்காரர்களின் இச்சை ரோகங்களுக்கு "அவர்களை ஒப்புக்கொடுத்த"போது அவர்கள் துன்புறக் காரணமான விளைவுகளை விவரித்ததில் பவுல் ஓரினச்சேர்க்கையின் முழு விவரத்தை ஆழ்ந்து எடுத் துரைத்தார். அவர், "ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து" என்று உரைத்தபின்பு, "தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்" என்றும் கூறினார் (ரோமர் 1:27).*

*பவுல், "தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனை" என்று கூறிய போது, பொதுவான மக்களைக் காட்டிலும், ஓரினச்சேர்க்கைக்காரர் களிடையே மிகவும் அதிகமாய் நிலவும் பாலியல் உறவினால் பரப்பப்படுகிற வியாதிகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்தாரா? 27ம் வசனத்தின் நிறைவுப்பகுதியை நாம் எய்ட்ஸ் என்ற கொடிய வியாதியானது, ஓரினச் சேர்க்கைக்காரர்களுக்கு மாத்திரம் வருவதாயிராவிட்டாலும், அது அந்த சமூகத்தின் மீது கொண்டுள்ள பேரழிவை விளைவிக்கும் செயல் பற்றிச் சிந்தியாதிருப்பது கடினமாகும்.*

*ஓரினச்சேர்க்கையை நடைமுறைப்படுத்துபவர்களின் ஆளுமைத் தன்மையின்மீதுள்ள எதிர்மறைச் செயல்விளைவு பற்றிப் பவுல் குறிப் பிட்டார் என்று பல எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். அப்போஸ்தலரின் வார்த்தைகள், "வித்தியாசப்பட்டதும், அடையாளம் கண்டறிவதை இழந்து*

போகும் துன்பமும் ... வாழ்வில் ஒருவர் தம் பணிப்பொறுப்பில் நிச்சயமற்ற தன்மையும்" பற்றி மறைமுகமாய் உணர்த்துவதாக சார்லஸ் ஸ்வின்டால் என்பவர் முடிவு செய்தார்.[31] நீங்கள் யாராக "இருக்கிறீர்கள்" என்பதைப் புரிந்துகொள்வதற்கான அவசியமான காரணம், (அவ்வாறு புரிந்துகொள்ளுகையில்) உங்களால், "நான் ஒரு ஆண்" அல்லது "நான் ஒரு பெண்" என்று கூறமுடிபவர்களாக இருக்கமுடியும் என்பதாகும். தேவனுடைய ஏற்பாட்டில் இருந்து மக்கள் விலகிச் செல்லும்போது, தனித்தன்மைகள் தேய்ந்து மங்குகின்றன. இவ்வாறு, தனிநபர்கள், "நான் யாராக இருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை!" என்று முறையிடும் திகைப்புக்குரிய கருத்தைக் கொண்டிருக்கிறோம். மேலும் ஓரினச்சேர்க்கையானது "வழக்கமாக பயம், தனிமை உணர்வு, புறக்கணிக்கப்படுதல், மற்றும் குற்ற உணர்வு ஆகியவற்றையும் தோழமை கொண்டுள்ளது" என்று F. லாகார்டு ஸ்மித் கூடுதலாகக் கூறினார்.[32]

ஒரு வேளை பவுல் ஓரினச்சேர்கைக்காரர்களின் வாழ்வுமுறை கர்த்தருக்குப் பிரியமற்றதாக உள்ளது என்பதை அறிதல் உட்பட, அவர்களால் அனுபவிக்கப்படும் ஒவ்வொரு "தண்டனை" பற்றியும் நினைவுகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்திருக்கலாம். 27ம் வசனத்தின் இறுதிப் பகுதியை AB வேதாகமம் பின்வருமாறு விரித்துரைக்கிறது: ஓரினச்சேர்க்கைச் செயலில் ஈடுபடுபவர்கள் "தங்கள் தவறான செய்கையினால் ஏற்படும், தவிர்க்க இயலாத விளைவுகளையும் தண்டனைகளையும் தங்கள் சொந்த சரீரங்களிலும் ஆளுமைத் தன்மைகளிலும் பெற்றுத் துன்புறுகின்றனர்." யாரோ ஒருவர், "பாவத்தின் விளைவுகள் என்பவை [எப்போதுமே] முன்னுரைக்கக் கூடியவையாக இருப்பதில்லை, ஆனால் அவைகள் தவிர்க்க இயலாதவைகளாக உள்ளன"[33] என்று கூறியுள்ளார்.

ஓரினச்சேர்க்கைக்காரர்கள் பெற்றுத் துன்புறும் தண்டனை எதுவாக இருப்பினும், அது ஒரு "தகுதியான/தக்க தண்டனை"யாகவே இருந்தது என்பதைப் பவுலின் வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். அது அவர்கள் சம்பாதித்துக்கொண்டதாக இருந்தது (ரோமர் 6:23அ), அது அவர்களின் முரண்பாடான செயலுக்குத் "தக்க கூலியாக" இருந்தது (1:27; NEB), அது அவர்கள் பெறத் தகுதியான "தண்டனை"யாக இருந்தது (TEV).

### இருதயத்தில் உணரப்பட்ட அக்கறை

இது ஓரினச்சேர்க்கைக்காரர்கள் துன்புறுவதை நாம் காணும்போது, நீங்களும் நானும் மகிழ்ச்சியடைய வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? சோதோமில் இருந்த ஓரினச்சேர்க்கைக்காரர்கள் அழிக்கப்பட இருந்ததாக ஆபிரகாமுக்கு கூறப்பட்டபோது, அவர் மகிழ்ச்சியடையவில்லை; மாறாக, அவர்களுக்காக அவர் ஜெபம் செய்தார் (ஆதியாகமம் 18). நாமும்கூட, எல்லாப் பாவிகள்மீதும் கொண்டுள்ள அதே அன்புமிகுந்த அக்கறையை ஓரினச்சேர்க்கை செய்பவர்கள்மீதும் கொண்டிருக்க வேண்டும். தீமோத்தேயுவுக்குப் பவுலின் அறிவுறுத்துதல்கள் மிகவும் தகுதியானதாகக் காணப்படுகின்றன:

> *கர்த்தருடைய ஊழியக்காரன் ... எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், ... தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் (2 தீமோத்தேயு 2:24-26).*

*பின்பு, அவர்கள் மனந்திரும்பும்போது, அவர்களைச் சந்தோஷத்துடன் திரும்பவும் ஏற்றுக்கொள்வது நமக்கு அவசியமானதாக உள்ளது.*

*இந்தக் கலந்துரையாடலை முடிப்பதற்குமுன், இந்தப் பாடத்தை வாசித்துக் கொண்டு இருப்பவர்களில் யாரேனும் ஓரினச்சேர்க்கைக் காரர்களாயிருந்தால், அவர்களுக்குச் சில வார்த்தைகளைக் கூறுவது எனக்கு அவசியமாய்த் தோன்றுகிறது. உங்களில் சிலர் வேதாகமம் போதிப்பது என்ன என்பது பற்றி அறிந்து (ஒரு வேளை வேதனை நிறைந்த வகையில் அறிந்து) இருக்கலாம், ஆனால் இவ்விஷயத்தில் தெரிவு செய்துகொள்வதற்கான எதையும் நீங்கள் கொண்டிருப்பதில்லை என்றும் நீங்கள் நம்பலாம். ஒரு வேளை நீங்கள் "தேவன் உங்களை ஓரினச்சேர்க்கைக்காரராகப் படைத்தார்" அதனால்தான் நீங்கள் இவ்வாறு இருக்கிறீர்கள் மற்றும் எப்போதும் இருப்பீர்கள் என்று (மற்ற சிலரால்) கூறப்பட்டிருக்கலாம். நான் ஒரு மருத்துவரோ அல்லது மனோத்துவ நிபுணரோ அல்ல, எனவே "ஜீன் என்ற மரபு செல்களில்" ஓரினச்சேர்க்கை எந்த அளவுக்கு உள்ளது மற்றும் அது எந்த அளவுக்கு கற்றுக்கொள்ளும் நடக்கையாக உள்ளது என்று என்னால் கூற முடியாது. இருப்பினும், நான் பின்வரும் கருத்தை அறிந்துள்ளேன்: தேவனுடைய உதவியுடன், மக்கள் ஓரினச்சேர்க்கை என்ற நடக்கையைக் கைவிட்டுள்ளனர்.*

*"ஆண்புணர்ச்சிக்காரரும்" அநீதியான மற்ற நபர்களும் "தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க" மாட்டார்கள் என்று கொரிந்தியர்களுக்குப் பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 6:9, 10). பின்பு அவர், "உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று கூறினார் (வசனம் 11).*

*ஒரு வேளை நீங்கள் ஓரினச்சேர்க்கைக்கு இயற்கையான உடற்போக்கைக் கொண்டிருக்கலாம். வரன்முறையின்றிப் பாலுறவு கொள்ளும் உடற்போக்குடைய சிலரை எனக்குத் தெரியும். எனக்கு ஒரு மனிதரைத் தெரியும். அவருடைய மரபுப் பின்னணியையும், அவருடைய தனிப்பட்ட தன்மையையும் நான் அறிந்த வகையில், அவை அவர் மதுபானம் பண்ணும் உடற்போக்கைப் பெற வழிசெய்திருக்கக்கூடும். பெரும்பான்மையானவர்கள் ஏதேனும் சில பாவங்களுக்கு ஏற்புடைய போக்கை கொண்டுள்ளனர்; இல்லையென்றால், பிசாசானவனால் நம்மைச் சோதிக்க இயலாது. இப்படிப்பட்ட ஏற்புடைய போக்குகள், ஓரினச்சேர்க்கை, பாலியல் ரீதியான வரம்பு மீறுதல், மதுபானம் பண்ணுதல், அல்லது*

*பிற பாவம் ஆகியவற்றைச் சரியானதாக்குவதில்லை. அவைகள் நமது பலவீனங்கள் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டியதன் அவசியத் தையும், பலத்திற்காகக் கர்த்தரைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் முக்கியத்துவப்படுத்துகின்றன (1 கொரிந் தியர் 10:13).*

*ஓரினச்சேர்க்கை என்பது பாவம் என்ற வகையில் கண்ணோக்குதல், அதை வெற்றி கொள்வதற்கான முதல் படி நிலையாகும்.*[34] *"ஓரினச்சேர்க் கையை ஒரு வியாதி என்று அழைத்தலானது வாடிக்கையாளரின் நம்பிக்கையை உயர்த்தி எழுப்புவதில்லை. ஆனால் அந்தச் செய்கையை, வேதாகமம் அழைப்பதுபோல, பாவம் என்ற அழைத்தலானது நம்பிக் கையை அளிக்கிறது. ஓரினச்சேர்க்கை செய்யும் பாவிகளுக்கு உதவுவதில் நம்பிக்கை என்பதைக் காட்டிலும் மிக முக்கியமான காரணி வேறெதுவும் அனேகமாக இருப்பதே கிடையாது" என்று (பெயர்) அறியப்படாத ஆலோசனையளிப்பவர் ஒருவர் எழுதினார்.*[35] *ஓரினச்சேர்க்கையாளர் நம்பிக்கை கொண்டிருக்க முடிவது ஏன்? ஏனென்றால் அவர் தமது பாவத்தி லிருந்து மனந்திரும்ப விருப்பமாயிருந்தால், அவரைத் தேவன் திரும்பவும் ஏற்றுக்கொள்வார் என்பதை அவர் அறிய முடியும். மற்றும், அவர் தமது பலவீனத்தை வெற்றி கொள்வதற்கான தமது போராட்டங்களில் தம்முடன் தேவன் இருப்பார் என்ற அவரது (தேவனுடைய) வாக்குத்தத்தத்தை/ உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளார். கர்த்தர் "சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" (எபிரெயர் 2:18).*

*ஓரினச்சேர்க்கையை வெற்றி கொள்ளுதல் சுலபமாயிருக்குமா? இல்லை. நீங்கள் ஓரினச்சேர்க்கை நடக்கையில் ஆழமாக ஈடுபட்டிருந்தால், நம்பிக்கைக்குப் பாத்திரமான, தொழில்ரீதியான, வளமூட்டும் கிறிஸ்தவ ஆலோசனையாளர்/ஆற்றுப்படுத்துநர் ஒருவரிடத்தில் உதவியை நாடுதல் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.*[36] *நீங்கள் வேறு எதைச் செய்தாலும், "தேவனாலே எல்லாம் கூடும்" என்ற சத்தியத்தைப் பற்றிக் கொள்ளுங்கள் (மத்தேயு 19:26). பவுலின் பின்வரும் வார்த்தைகளை உங்கள் குறிக் கோளாகக் கொண்டிருங்கள்: "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13)!*

## முடிவுரை

*ரோமர் 1:18-32ஐ தெர்தியுவுக்கு (எழுதுவதற்காக) எடுத்துக்கூறிய வேளையில் பவுலின் கண்கள் பிரகாசித்தனவா, அல்லது அவற்றில் கண்ணீர் நிரம்பியிருந்ததா? உலகமானது தனது சிறு பிள்ளைத்தனமான யூகங்களையும் சுயநலமான விருப்பங்களையும் தேவனுடைய இடத்திற்கு வைத்து, அவரை மாற்றிப் போட்டிருந்த வகையில், பைத்தியக்காரத்தன மாய்ச் சென்று கொண்டிருந்ததை அவர் விவரித்தார். லெஸ்லீ* C. *ஆலென் என்பவர் பவுலின் சிந்தனைகளைப் பின்வருமாறு தொகுத்துரைத்தார்: "எங்கும் கூச்சல் குழப்பம் உள்ளது. மிருகங்கள் கடவுள்களாகி இருக் கின்றன, ஆண், பெண்ணாகியுள்ளான், தவறு, சரியானதாகி இருக்கிறது.*

*சுபாவமானது தேவனின்றி சுபாவத்திற்கு விரோதமானதாகி உள்ளது. சிருஷ்டிகர் புறக்கணிக்கப்பட்ட நிலையில் சிருஷ்டியானது குழப்பத்தில் உள்ளது. ...”*[37]


*வசனங்கள் 18ல் இருந்து 32 வரையிலான பகுதி பற்றிய நமது படிப்பை, நாம் நமது அடுத்த பாடத்தில் முடிப்போம். இந்தப் பாடத்தை முடிப்பதற்கு முன்பு, நான் ஒரு எச்சரிக்கையை உரத்துக் கூறியாக வேண்டும். நீங்கள் பாலுறவின் ஒழுக்கவீனத்தினால் குற்றப்படாதிருந்தால் அல்லது நீங்கள் ஓரினச்சேர்க்கை நாடல்களுடன் போராடாதிருந்தால், இந்தப்பாடம் உங்களுக்குச் சிறிதளவே பயன்பாடு உள்ளதென்று நீங்கள் நினைக்கலாம். பாலியல் ரீதியான பாவத்தைப் பவுல் கண்டனம் பண்ணும் வேளையில் அதை ஆமோதிக்கும் வகையில் நீங்கள் தலையசைக்கலாம். சுயநீதியைப் பற்றி எச்சரிக்கையாயிருங்கள்! 2ம் அதிகாரத்தில் பவுல், “ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; ... அவைகளை நீயே செய்கிற படியால், ... உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்” (வசனம் 1). ஒருவேளை நீங்கள், “ஆனால் நான் ஒருக்காலும் வேசித்தனமோ அல்லது விபசாரமோ செய்ததில்லை, நான் ஓரினச்சேர்க்கைக்காரனுமல்ல” என்று மறுத்துரைக்கலாம். நீங்கள் ஒருவேளை அப்படிப்பட்ட செயல்களைச் செய்யாமல் இருக்கலாம், ஆனால் எப்பொழுதாவது நீங்கள் காமம் நிறைந்த சிந்தனையைக் கொண்டிருந்ததில்லையா (மத்தேயு 5:28)? நீங்கள் ஓரினச் சேர்க்கை என்ற விஷயத்தில் குற்றமற்று இருக்கலாம், ஆனால் நீங்கள் ஒரு பாவமாவது எப்போதாவது செய்ததில்லையா? பாவம் பாவமே என்பதை நினைவில் வையுங்கள். நாம் யாவரும் பாவிகளாக இருக்கிறோம்; நாம் யாவரும் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறோம் (ரோமர் 3:23; 6:23).*

*பாவத்தைக் குறித்துப் புறஜாதியாரின் உலகத்திற்கு உணர்த்துவதும், இவ்விதமாகத் தேவனுடைய கிருபை, இரக்கம் ஆகியவற்றின் அவசி யத்தைக் காண்பிப்பதும், 1:18-32ல் பவுலின் நோக்கமாயிருந்தது. நீங்கள் பாவியாயிருந்தால் - நீங்கள் அவ்வாறே இருக்கிறீர்கள் - இப்போது நாம் படித்துள்ள வேத வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள மக்களில் எவராவது ஒருவரைப் போன்றே உங்களுக்கும் தேவனுடைய கிருபை அதிகமாய்த் தேவைப்படுகிறது! இந்தப்பாடத்தில் நான், “துன்பகரமான புறக்கணித்தல்,” “இடர்ப்படுத்தும் விளைவு,” மற்றும் “பயங்கரமான அழிவு” ஆகியவைப் பற்றிப் பேசினேன். இது இவ்வரலாற்றின் முடிவாயிருப்ப தில்லை என்பதற்காகத் தேவனுக்கு நன்றி. ரோமருக்கு எழுதின நிருபத்தில், பிற்பாடு, பவுல் “மெய்சிலிர்க்கச் செய்யும் பரிகாரம்” என்பதைப் பற்றிக் கூறினார்: அது இயேசுவின் இரத்தம்! உங்கள் பாவம் எதுவாக இருந்தாலும், அந்த இரத்தத்தினால் கழுவப்படாதிருந்தால், அன்பான, கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின்மூலம் - இன்றைக்கே - கர்த்தரிடம் வரும்படி உங்களை நான் வேண்டுகிறேன் (நடபடிகள் 2:36-38)!*

## பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்குமான குறிப்புகள்

*இந்த எடுத்துரைப்பில், நான் உரிமைத்துவத்தின் எல்லைகளுக்கு மீறி அடிவைக்காமல், தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்க முயற்சித்தேன். நீங்கள் பிரசங்கிக்கும் அல்லது போதிக்கும் இடத்தில் வெளிப்படையாகக் கூறத் தகுதியானவை எவை மற்றும் அவ்வாறு கூறத் தகுதியற்றவை எவை என்பதை நீங்கள் மாத்திரம் அறிகிறீர்கள். உங்கள் உரையைக் கேட்பவர்களின் மனம் புண்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.*

*பாவம் என்பது ஒரு நபரை மிருகங்களைக் காட்டிலும் தாழ்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லக்கூடும் என்று இப்பாடத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன். இதை விவரிக்கப் பின்வரும் எளிய வரைபடம் உதவக்கூடும்:*




*ரோமர் 1:24-28 மற்றும் 1:28-32 ஆகியவற்றிற்கான பாடங்களிலிருந்து நீங்கள் ஒரு பாடத்தை ஏற்படுத்தத் தேர்ந்துகொள்ளலாம். அவ்வசனங்களைப் புறக்குறிப்பிடுவதற்கான ஒரு வழிமுறை பின்வருமாறு: (1) பரிதாபகரமான உண்மை நிலை: கட்டுப்பாடற்ற வாழ்வு (1:24, 26, 28); (2) பரிதாபகரமான விளைவு: சுபாவத்துக்கு விரோதமான இச்சை (1:24-27); (3) பரிதாபகரமான பதிவு: ஒரு சுவையற்ற பட்டியல் (1:28-32).*

---

*குறிப்புகள்*

[1]*ஏற்புடைய வகையிலான "நல்ல செய்தி - மோசமான செய்தி" பற்றிய கதையொன்று உங்களிடம் இருந்தால், அதைக்கொண்டு நீங்கள் இப்பாடத்தைத் தொடங்க முடியும்.* [2]*பின்வருவன உட்படப் பல்வேறு ஆதாரமூலங்களில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளது:* Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 73; and Charles R. Swindoll, *Coming to Terms with Sin: A Study of Romans 1-5* (Anaheim, Calif.: Insight for Living, 1999), 16. [3]F. Buschel, "*dído mi*," in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 166. [4]*The Analytical Greek*

*Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 302. [5]*எடுத்துக்காட்டாக, "அவர்களை ஒப்புக்கொடுத்ததில்" தேவன் செயலற்று அல்ல, ஆனால் செயல்துடிப்புடன் இருந்தார் என்று பல எழுத்தாளர்கள் வலியுறுத்துகின்றனர்.* [6]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 48. [7]J. D. Thomas, Class Notes, *Romans,* Abilene Christian College (1955). [8]Richard Rogers, *Paid In Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 33. [9]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans*, Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 31. [10]C. S. Lewis, *The Problem of Pain* (Oxford: N.p., 1940; reprint, New York: Macmillan Publishing Co., 1962), 127-28.

[11]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 384. [12]Friedrich Hauck, "*katharós*," in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 381-82 ஆகிய *புத்தகங்களில் பல்வேறு பயன்பாடுகள் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.* [13]*"தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமணங்கள்" மற்றும் "வசனரீதியான திருமணங்கள்" போன்ற சொற்றொடர்களை நான் பயன்படுத்துவதைக் கவனியுங்கள். சில திருமணங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவைகளாய் இருப்பதில்லை (மாற்கு 10:11ஐக் காணவும்).* [14]NASB வேதாகமத்தில் "had relations with" *என்றுள்ளது, ஆனால்* "knew" *என்பது நேரடியான தரவழைப்பாக உள்ளது.* [15]*"வேசித்தனம்" மற்றும் "விபசாரம்" என்ற வார்த்தைகள், பாலியல்ரீதியான எல்லாப் பாவங்களுக்கும் முற்றான அர்த்தமுள்ள சொற்றொடர்களாகச் சில வேளைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரே வகையான சந்தர்ப்பப்பொருளில் பயன்படுத்தப்படும்போது, "வேசித்தனம்" என்பது திருமணமாகாத நபர்களிடையே நிலவும் பாலுறவையும், "விபசாரம்" என்பது குறைந்தபட்சம், திருமணமான ஒரு நபரை உள்ளடக்குகிற முறையற்ற பாலுறவையும் பொதுவாகக் குறிக்கிறது.* [16]*நீங்கள் வாழ்கிற கலாச்சாரத்தில் இது எவ்வாறு பிரதிபலிக்கப்படுகிறது என்பதற்கு உதாரணங்களைக் கொடுக்கவும்.* [17]*"சரீரங்களை அவமானப்படுத்துதல்" என்ற கருத்தானது, பவுல் அடுத்துக் கலந்துரையாடிய ஓரினச்சேர்க்கை என்ற விஷயத்திற்கு விசேஷித்த பயன்பாட்டை கொண்டிருக்கலாம். இருப்பினும், வசனத்திற்குப் புறம்பான பாலுறவு எவ்வாறு சரீரத்தை அவமானப்படுத்துகிறது என்பது பற்றிய பொதுவான சில குறிப்புகள் இவ்விடத்தில் ஏற்புடையவைகளாக உள்ளன.* [18]Vine, 16. [19]Ibid., 660, 567. [20]*இவ்விடத்தில் கிரேக்க வசனம் "பெண்" என்று அர்த்தப்படுகிற ஒருமை வடிவத்தைப் பயன்படுத்துகிறது, ஆனால் "பெண்" என்பது இவ்விடத்தில் பெண்களின் குழுவைக் குறிக்கிறது என்பது தெளிவு. ஆகவே பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகள் "பெண்கள்" என்ற பன்மைச்சொல்லைக் கொண்டுள்ளன.*

[21] Morris, 92. [22]*The Analytical Greek Lexicon*, 62. [23]J. Schneider, *"schéma,"* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 1129. [24]Vine, 205. [25]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 66-67. [26]Ibid., 62. [27]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 78. [28]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 25. [29]"Morality and Homosexuality," *Wall Street Journal*

(24 February 1994): A18. [30]Bobby Dockery, "Homosexuality" (tract) (N.p.: Gospel Tracts International, n.d.).

[31]Charles Swindoll, "Sinnerama in Panorama" (Part 2) (Anaheim, Calif.: Insight for Living, 1976), cassette. [32]F. LaGard Smith, "The Gay-is-Good Sales Pitch Is a Rip-Off," *Gospel Advocate* (2 March 1978): 132. [33]Barton, Veerman, and Wilson, 36. [34]Swindoll, *Coming to Terms with Sin*, 26. [35]Ibid., 6. [36]Barton, Veerman, and Wilson, 36. [37]Leslie C. Allen, "Romans," in *New International Bible Commentary*, ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1979), 1319.

## ஓரினச்சேர்க்கைக்கு "வழக்கு"?

*ஓரினச்சேர்க்கை வாழ்வுமுறைக்கு ஒப்புக்கொடுத்திருப்பவர்களில் பெரும்பான்மையான மக்கள், ஓரினச்சேர்க்கை பற்றி வேதாகமம் கூறுவதைப் புறக்கணிக்கின்றனர்; அப்படிப்பட்ட போதனைகள் "இன்றைய நாட்களுக்கு ஏற்புடையவையல்ல" என்று அவர்கள் கருதுகின்றனர். இருப்பினும், சிலர், தங்கள் இளமைப்பிராயத்திலேயே தேவனையும் வேதாகமத்தையும் மதிப்பதற்குக் கற்பிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, அவர்கள் ஓரினச்சேர்க்கை தொடர்பான வேதவசனத்துடன் போராடுகின்றனர். ரோமர் 1:26, 27 போன்ற வசனப்பகுதிகளை "விளக்கப்படுத்த" முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட முயற்சிகளில் ஒன்று "தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்" என்ற பாடத்தில் குறிப்பிடப்பட்டது. மற்ற சில விவாதங்கள், வேதாகமத்தின் பதிலுரைகளுடன் கீழே மாதிரி யாகத் தரப்படுகின்றன.*

*விவாதம் 1: "ஓரினச்சேர்க்கையானது பெரும்பாலும் 'sodomy' என்று அழைக்கப்பட்டுள்ளது, ஆனால் சோதோமின் மனிதர்கள் ஓரினச்சேர்க்கை என்ற பாவத்தில் ஈடுபட்டிருக்கவில்லை, அதற்குப்பதிலாக, அவர்கள் உபசரிப்புத் தன்மையின்மை - அல்லது, ஒருவேளை, குழுவாகச் சேர்ந்து கற்பழித்தல் என்ற பாவத்தில் ஈடுபட்டிருந்தனர்."*

*பதில்: "எசேக்கியேலின் உருவகங்கள் ஒன்றில், அவர் சோதோமின் பல பாவங்களைப் பற்றிக் குறிப்பிட்டார் (16:49, 50), ஆனால் ஆண்கள் பிற ஆண்களுடன் பாலியல் உறவுகள் கொண்டிருந்த பாவத்தினால்தான் சோதோம் புகழ்ச்சியற்றுப்போனது (ஆதியாகமம் 19:5ஐக் காணவும்)."*

*விவாதம் 2: "வேதாகமத்தின் முக்கிய பாத்திரங்கள் ஓரினச்சேர்க்கைக் காரர்களாயிருந்தனர். எடுத்துக்காட்டாக, 1 சாமுவேல் 18:1ன்படி தாவீதும் யோனத்தானும், ஒருவரையொருவர் நேசித்தனர்."*

*பதில்: "வேதாகமத்தின் பாத்திரங்கள் பாவம் செய்தனர் என்ற உண்மை யானது அந்தப் பாவம் சரியானது என்ற கருத்தை ஏற்படுத்துவதில்லை, ஆனாலும் இது ஓரினச்சேர்க்கை என்ற விஷயமாயிருந்ததில்லை. தாவீது பெண்களிடத்தில் பலமாய் ஈர்க்கப்பட்ட ஈரினச்சேர்க்கையாளராயிருந்தார் (2 சாமுவேல் 11:2). யோனத்தான் மீது அவர் கொண்டிருந்த அன்பு ஒரு நண்பன் மீதான அன்பாயிருந்தது. நான் உங்களை அன்புகூருகிறேன் (யோவான் 13:34), ஆனால் இவ்விஷயம் என்னை ஓரினச்சேர்க்கைக்கார னாக்குவதில்லை."*

*விவாதம் 3: "ஓரினச்சேர்க்கை என்பது மோசமானதென்றால், இயேசு அதைக் கண்டனம் செய்திருக்க வேண்டுமல்லவா, ஆனால் அவர் அவ்வாறு கண்டனம் செய்யவில்லையே."*

*பதில்: "பாலியல்ரீதியான பாவம் பற்றி இயேசு பொதுவாக அங்கீ கரிக்காத விஷயத்தில் ஓரினச்சேர்க்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது (மத்தேயு 5:27, 32ஐக் காணவும்). மேலும், இயேசு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் 'ஒரே மாம்சமாகுதல்' என்ற தேவனுடைய திட்டத்தை*

*வலியுறுத்தினார் (மத்தேயு 19:4). மற்றும், இயேசுவினுடைய அப்போஸ்தலர்களின் போதனை உண்மையில் இயேசுவின் போதனையாயிருக்கிறது (லூக்கா 10:16; ரோமர் 1:26, 27ஐக் காணவும்).”*

*விவாதம் 4: “ஓரினச்சேர்க்கையைக் கண்டனம் பண்ணுதல் அல்ல, ஆனால் தேவனுடைய நீதி மனிதகுலத்திற்குத் தேவை என்று காண்பித்தலே ரோமர் 1:26, 27ல் பவுலின் நோக்கமாயிருந்தது.”*

*பதில்: “தேவனுடைய நீதிக்கான தேவையை நிலைநாட்டுவதற்குப், பவுல் மனிதகுலம் எவ்வளவு பாவம் நிறைந்ததாயிற்று என்பதைச் சுட்டிக் காண்பித்தார். இந்தப் பாவம் நிறைந்த நிலைக்கு ஓரினச்சேர்க்கை என்பது முக்கியமான உதாரணமாயிருந்தது.”*

*விவாதம் 5: “ரோமர் 1:26, 27ல், பவுல் பாலியல் உறவைப் பிறர்மீது (விருப்பமற்ற பிள்ளையின் மீது போன்ற விஷயத்தில்) வற்புறுத்துதல் என்ற விஷயத்தையே தமது சிந்தையில் கொண்டிருந்தார். ‘சம்மதமான இரு வயது வந்தவர்களிடையே’ உள்ள பாலுறவை அவர் கண்டனம் செய்யவில்லை.”*

*பதில்: “ஆணோடே ஆண் ‘ஒருவர் மீதொருவர் விரகதாபத்தினால் பொங்கினர்’ என்று பவுல் கூறினார் (வசனம் 27). இது பரஸ்பரமே ஓரினச் சேர்க்கையாக இருந்தது. 27ம் வசனம், ‘அப்படியே’ என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது, இது பெண்கள் மற்றும் ஆண்களின் ஓரினச்சேர்க்கை என்ற பாவத்தை ஒன்றாய்ப் பிணைக்கிறது. பெண்கள் மற்றும் ஆண்களால் செய்யப்படும் ஓரினச்சேர்க்கையைப் பவுல் கண்டனம் செய்தார்.”*

*விவாதம் 6: “ரோமப்பேரரசர்கள் மற்றும் மாபெரும் தத்துவ ஞானிகள் உட்பட, முக்கியமான பல தனிநபர்கள் ஓரினச்சேர்க்கைக்காரர்களாக இருந்துள்ளனர்.”*

*பதில்: “ஆம், இருப்பினும் அவர்களைப் பவுல் கண்டனம் செய்தார். அவர்களின் விலகிச் செல்லும் நடக்கையானது அவர்கள் வாழ்ந்த சமூகத்தின் ஒழுக்கக் கோட்பாட்டை அழிக்கும் காரணியாக இருந்தது.”*

*டேவிட் ரோப்பர்*